(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)
**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**
**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**
**SESSIONS CASE NO.208/2017 P.W - 6**

| | | |
|---|---|---|
| Name | : | ஷகீலாபானு |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 20-09-2021.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது கதவு எண்.2/118, சக்திநகர், 6 வதுகுறுக்குத் தெரு, அய்யர்பங்களாவில் குடியிருக்கிறேன். இந்த வழக்கில் இறந்து போன சாகுல்ஹமீது என்னுடைய தம்பி ஆவார். என் உடன்பிறந்த தங்கை ஆமினாவும், அவருக்கு குழந்தைகள் கிடையாது. அவருடன் என் தம்பி சாகுல்ஹமீது இருந்து வந்தார். என்னுடைய அம்மா வீடு கூடல்நகரில் உள்ளது. என் அம்மா, அப்பா இறந்துவிட்டார்கள். என் அண்ணன் வெளிநாட்டில் உள்ளார். என் அண்ணி மற்றும் அவருடைய குழந்தைக்கு துணையாகவும் என் தம்பி இருந்தான். என்னுடைய வீட்டிற்கு எப்போதாவது வருவான். நோன்புக்கு வருவான். டிரஸ் எடுத்து கொடுப்பேன். 26.09.2014 ஆம் தேதி இரவு சுமார் 8, 9 மணியளவில் என் தங்கை வீட்டுக்காரர் அபுதாகிர் எனக்கு போன் செய்து, தம்பியை கொலை செய்துவிட்டதாகவும், மார்ச்சுவரியில் வைத்திருப்பதாகவும், அடையாளம் காட்டும்படி தன்னை அழைத்திருப்பதாகவும் சொன்னார். அதன்பிறகு நாங்கள் என் தங்கை வீட்டிற்கு சென்றோம். மறுநாள் தம்பியின் உடலை கொடுத்தார்கள். பின்பு அடக்கம் செய்தோம். பின்னால் யாரோ 2, 3 பையன்கள் சேர்ந்து என் தம்பியை கொலை செய்துவிட்டதாக சொன்னார்கள். அவர்கள் யாரென்று எனக்குத் தெரியாது. என்னை போலிசார் விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசுதரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் போலிஸ் விசாரணையில் கடந்த 22.09.2014 ஆம் தேதி இரவு 11.30 மணியளவில் சாகுல்ஹமீதை தேடி கூடல்புதூரைச் சேர்ந்த சிவராமகிருஷ்ணன், ஹரி, பாலாஜி ஆகியோர்கள் கூடல்புதூர் ஏரியாவில் வந்து, உங்கள் தம்பி ரவுடித்தனம் பண்ணுவானா அவனை ஒழுங்கா இருக்கச் சொல்லுங்கள் இல்லைன்னா அவன் சங்கை அறுக்காமல் இருக்கமாட்டோம் என்று அதில் ஒருவன் கையில் வைத்திருந்த கத்தியை காட்டி மிரட்டியதாகவும், அவனை கொல்லாமல் விடமாட்டோம் என்று சத்தம் போட்டுவிட்டு சென்றதாகவும், என் தங்கை ஆமினா போன் பண்ணி என்னிடம் கூறினால் என்றும், தம்பி சாகுல்ஹமீதை கவனாக இருக்க சொல்லுங்கள் என்று சொன்னேன் என்றும், கூறிவிட்டு தற்போது வயதின் மூப்பின் காரணமாக நடந்த விசயத்தை மறந்து ஞாபகமில்லை என்று கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

என் தம்பி மீதான வழக்குகள் பற்றி எனக்குத் தெரியாது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.

(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)
**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**
**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**
**SESSIONS CASE NO**.208/2017 **P**.**W** - 7

| | | |
|---|---|---|
| Name | : | முக்தாத்பானு |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 20-09-2021.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது பாண்டிகோவில் தெரு சம்மட்டிபுரத்தில் குடியிருக்கிறேன். 15 ஆண்டுகளாக மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறேன். இறந்து போன சாகுல்ஹமீது என்னுடைய தம்பி. கடந்த 26.09.2014 அன்று இரவு சுமார் 10 மணிக்கு மேல் என் மாமா சையதுஅபுதாகிர் எனக்கு போன் செய்து, என் தம்பி இறந்ததுவிட்டதாகவும், போஸ்ட்மார்ட்டத்திற்கு வைத்திருப்பதாகவும் தகவல் சொன்னார். எனக்கு போன் செய்யும் போது ஆக்ஸிடெண்ட் என்று சொன்னார். அதன்பிறகு லேட்நைட்டில் அவர் கொலை செய்யப்பட்டார் என்று தகவல் தெரிந்தது. யாரால் கொலை செய்யப்பட்டார் என்று எனக்குத் தெரியாது. அவர் கொலை செய்யப்படுவதற்கு முன்னர் வேறு சம்பவம், பிரச்சனை பற்றி எனக்குத் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. மறுநாள் போஸ்ட்மார்டடத்திற்காக வைத்திருந்த உடலை நான் பார்த்தேன். நான் கைக்குழந்தையுடன் இருந்ததால் அடக்கத்திற்கு செல்லவில்லை. என் அப்பா 2005 ல் இறந்துவிட்டார். என் அம்மா 2011 ல் இறந்துவிட்டார். என் தம்பி சாகுல்ஹமீதுக்கு திருமணமாகவில்லை. என் தம்பி ரோஸ்கோர்சில் இருந்த என் அக்கா மற்றும் அவருடைய அண்ணி வீட்டிலும் இருப்பார்.

**சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசுதரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் போலிஸ் விசாரணையில் கடந்த 22.09.2014 ஆம் தேதி இரவு 11.30 மணியளவில் சாகுல்ஹமீதை தேடி கூடல்புதூரைச் சேர்ந்த சிவராமகிருஷ்ணன், ஹரி, பாலாஜி ஆகியோர்கள் கூடல்புதூர் ஏரியாவில் வந்து, உங்கள் தம்பி ரவுடித்தனம் பண்ணுவானா அவனை ஒழுங்கா இருக்கச் சொல்லுங்கள் இல்லைன்னா அவன் சங்கை அறுக்காமல் இருக்கமாட்டோம் என்று அதில் ஒருவன் கையில் வைத்திருந்த கத்தியை காட்டி மிரட்டியதாகவும், அவனை கொல்லாமல் விடமாட்டோம் என்று சத்தம் போட்டுவிட்டு சென்றதாகவும், என் தங்கை ஆமினா போன் பண்ணி என்னிடம் கூறினால் என்றும், தம்பி சாகுல்ஹமீதை கவனாக இருக்க சொல்லுங்கள் என்று சொன்னேன் என்றும், கூறிவிட்டு தற்போது வயதின் மூப்பின் காரணமாக நடந்த விசயத்தை மறந்து ஞாபகமில்லை என்று கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை - இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.